**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 6 / 2024**

**2025ம் வருடம் நவம்பர் மாதம் 7 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ம.சா.1 – கண்ணன்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி :–**

விபத்து 13.08.2023 அன்று காலை 9 மணியளவில் ஏற்பட்டது. நான் திருப்புவனத்தில் மதுரை – இராமேஸ்வரம் பிரதான சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் சென்ற போது விபத்து ஏற்பட்டது. நான் இருசக்கர வாகனத்தில் வலது பக்கமாக திரும்பிய போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட சாலை நான்குவழிச்சாலை என்றால் சரியல்ல. நான் சாலையில் வலது பக்கமாக திரும்பிய போது பின்னால் வந்த வாகனங்களை கவனித்து நின்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை. நான் 13.08.2023 முதல் 16.08.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். 16.08.2023க்கு பின்னர் நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவ சிகிச்சை துறைக்கான அரசின் காப்பீடு பெற்றேனா என்றால் பெற்றுக்கொண்டேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 ஆவணத்தில் மருத்துவ காப்பீடு ரூ.62823/– பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விபத்தின் போது திருப்புவனத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். விபத்தினால் எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் தற்போது திருப்பத்தூரில் தனி வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன்.

எனது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதால் காப்பீடு விதிகள் மீறப்பட்டுள்ளதால் 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு விபத்தினால் தலை மற்றும் வலது கையில் காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் அவை முழுவதுமாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எந்தவித நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எந்தவித அடிப்படை ஆதாரமின்றி அதிகமான இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை